## டிசம்பர் – 27 – வியாழன்
### புனித யோவான் - நற்செய்தியாளர் - திருத்தூதர்
### “வெளிப்படுத்தப்பட்ட அந்த வாழ்வை நாங்கள் கண்டோம்” (1யோவா 1:2)
---

**முதல் வாசகம் : 1 யோவான் 1 : 1 - 4**

தொடக்க முதல் இருந்த வாழ்வு அளிக்கும் வாக்கை நாங்கள் கேட்டோம் கண்ணால் கண்டோம் உற்று நோக்கினோம் கையால் தொட்டுணர்ந்தோம். வெளிப்படுத்தப்பட்ட அந்த வாழ்வை நாங்கள் கண்டோம். அதற்குச் சான்று பகர்கிறோம். தந்தையோடு இருந்ததும் எங்களுக்கு வெளிப்படுத்தப்பட்டதுமான அந்த ”நிலைவாழ்வு” பற்றி உங்களுக்கு அறிவிக்கிறோம். தந்தையுடனும் அவருடைய மகன் இயேசு கிறிஸ்துவுடனும் நாங்கள் கொண்டுள்ள நட்புறவை நீங்களும் கொண்டிருக்குமாறு நாங்கள் கண்டதை, நாங்கள் கேட்டதை உங்களுக்கு அறிவிக்கிறோம். எங்களது மகிழ்ச்சி நிறைவடையுமாறு உங்களுக்கு இதை எழுதுகிறோம்.

**பதில்பாடல் :** நேர்மையாளர்களே ஆண்டவரில் களி கூருங்கள்.

**நற்செய்தி : யோவான் 20 : 1 – 8**

வாரத்தின் முதல் நாளன்று விடியற் காலையில் இருள் நீங்கும் முன்பே மகதலா மரியா கல்லறைக்குச் சென்றார் கல்லறை வாயிலில் இருந்த கல் அகற்றப்பட்டிருப்பதைக் கண்டார். எனவே அவர் சீமோன் பேதுருவிடமும் இயேசு தனி அன்பு கொண்டிருந்த மற்றச் சீடரிடமும் வந்து, ”ஆண்டவரைக் கல்லறையிலிருந்து யாரோ எடுத்துக் கொண்டு போய் விட்டனர் அவரை எங்கே வைத்தனரோ, எங்களுக்குத் தெரியவில்லை!” என்றார். இதைக் கேட்ட பேதுருவும் மற்றச் சீடரும் கல்லறைக்குப் புறப்பட்டனர். இருவரும் ஒருமித்து ஓடினர். மற்றச் சீடர் பேதுருவை விட விரைவாக ஓடி முதலில் கல்லறையை அடைந்தார். அவர் குனிந்து பார்த்தபோது துணிகள் கிடப்பதைக் கண்டார் ஆனால் உள்ளே நுழையவில்லை. அவருக்குப் பின்னாலேயே சீமோன் பேதுருவும் வந்தார். நேரே அவர் கல்லறைக்குள் நுழைந்தார். அங்குத் துணிகளையும், இயேசுவின் தலையை மூடியிருந்த துண்டையும் கண்டார். அத்துண்டு மற்றத் துணிகளோடு இல்லாமல் ஓரிடத்தில் தனியாகச் சுருட்டி வைக்கப்பட்டிருந்தது. பின்னர், கல்லறைக்கு முதலில் வந்து சேர்ந்த மற்றச் சீடரும் உள்ளே சென்றார், கண்டார் நம்பினார்.

**தியானம் :** யேசுவின் பிறப்பை நினைவு கூர்ந்த 3ம் நாள் அவரின் கல்லறை பற்றியும் உயிர்ப்பு பற்றியும் நாம் வாசிக்கும்போது சிறிது நெருடல் எழத்தான் செய்யும். இன்றைய வாசகங்கள் இன்று நாம் நினைவு கூரும் புனிதருக்காக எடுக்கப் பட்டுள்ளது. அவர் வேறு யாரும் அல்லர். யேசுவின் அன்பு சீடர் யோவான். இவர்தான் யோவான் நற்செய்தியையும் யோவான் திரு முகங்களையும் எழுதியதாக நம்பப் படுகின்றது, அவரின் வரலாற்றை நாம் சற்று பார்ப்போம். புனித யோவான் கலிலேயாவைச் சார்ந்தவர். இவரது தந்தை பெயர் செபதேயு. இயேசுவின் திருத்தூதர்களுள் ஒருவரான யாக்கோபு இவரது சகோதரர் ஆவார். முதலில் திருமுழுக்கு யோவானின் சீடராக இருந்த யோவான், அவரது வழிகாட்டுதலின்படி இயேசுவைப் பின்பற்றினார். இயேசு யோவானையும் அவர் சகோதரர் யாக்கோபையும் “இடியின் மக்கள்“ என்று அழைத்தார். திருத்தூதர்களிலேயே மிகவும் இளையவராக யோவான் இருந்தார். எனவே, இயேசு இவரை மிகவும் அன்பு செய்தார். இயேசுவின் உருமாற்றம் உள்ளிட்ட முக்கிய நிகழ்வுகளில் உடனிருந்த மூன்று திருத்தூதர்களுள் யோவானும் ஒருவர். இறுதி இராவுணவின்போது, இவர் இயேசுவின் மார்பில் சாய்ந்திருந்தார். இயேசுவின் திருப்பாடுகளின் போது, இவர் தைரியமாக அவரைப் பின்தொடர்ந்து சென்று சிலுவை அடியில் நின்றார். அதன் விளைவாக, தனது தாய் மரியாவைப் பாதுகாக்கும் பொறுப்பை இயேசு யோவானிடம் அளித்தார். இன்றைய நற்செய்தியில் குறிப்பிடப்படும் மற்ற சீடர் இவராகத்தான் இருக்க வேண்டும். “மற்றச் சீடர் பேதுருவை விட விரைவாக ஓடி முதலில் கல்லறையை அடைந்தார்” என்று பார்க்கின்றோம். இயேசுவின் விண்ணேற்றத்திற்கு பிறகு, திருத்தூதர் பேதுருவோடு இணைந்து சிறிது காலம் எருசலேமில் நற்செய்தி அறிவித்த யோவான், மரியாவின் விண்ணேற்புக்கு பின்னர் எபேசு நகருக்கு சென்று போதித்தார் என்று நம்பப்படுகிறது. ரோமப் பேரரசன் தொமீசியன் காலத்தில், இவர் கொதிக்கும் எண்ணெய் கொப்பரையில் போடப்பட்டும் எத்தீங்கும் இன்றி உயிர் பிழைத்ததாக கூறப்படுகிறது. அதன்பின் பத்மு தீவுக்கு நாடு கடத்தப்பட்ட யோவான் அங்கேயே மரணம் அடைந்தார். இவரின் சாட்சிய வாழ்வால்தான் இன்றும் திருச்சபை நிலைத்து நிற்கின்றது. யேசுவின் மேல் அவர் கொண்டிருந்த அன்பு எவ்வளவு என்று பாருங்கள். எம்மால் இவ்வாறு அன்பு செய்ய முடியுமா? நாமும் அவரை பின்பற்றி வாழ முயற்சி எடுப்போம்.